DEPOSITION OF THE WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM

**Case no: CC.No. 58/2023**

**prosecution witness: Pw 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : | Caste | : |
| Fathers Name | : | calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**Accused present**

வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண்.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : வேலம்மாள் | ஜாதி | : |
| த/பெ. | : | தொழில் | : |
| கிராமம் | : | சமயம் | : |
| தாலுகா | : | வயது | : |

**18.07.2023**

முதல் விசாரணை:-

1. நான் பாம்பன் தரவைத்தோப்பில் வசித்து வருகிறேன். பெட்டி கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 2022-ம் வருடம் 16ம் தேதி எனது ஆடு ஆஜர் எதிரியின் வீட்டின் அருகே நின்றுகொண்டிருந்தது. அப்போது எதிரியின் நாய் எனது ஆட்டை கடித்துவிட்டது. அன்று மாலை 6 மணிக்கு ஆஜர் எதிரி தண்ணீயை போட்டுவிட்டு எங்கள் வீட்டு முன்பு வந்து கண்டாரஓலி, தேவடியா என அசிங்கமாக பேசினார்.

2. என் கணவர் முனீஸ்வரன் ஏன் இப்படி பேசுகிறாய் என்று எதிரியிடம் கேட்டதற்கு இரும்பு கம்பியை கொண்டு என் கணவரின் நெஞ்சில் அடித்துவிட்டார். என் கணவர் கீழே விழுந்ததும் நான் சென்று கேட்டபோது என் கழுத்தில் இருந்த தாலி செயினை பிடித்து இழுத்து அறுத்துவிட்டார். சேலையை கிழித்து விட்டார். பின்பு எதிரி வீட்டை விட்டு ஓடிவிடு இல்லாவிட்டால் தீயை வைத்து கொண்டு விடுவேன் என்று மிரட்டினார்.

3. அப்போது முனீஸ்வரி மற்றும் ராசாத்தி வந்து எதிரியை விலக்கிவிட்டார்கள். பின்னர் இராமேஸ்வரம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றோம். நடந்த சம்பவத்திற்கு நடவடிக்கை எடுக்க பாம்பன் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது அதில் உள்ள கையொப்பம் என்னுடையது. அந்த புகார் மனு அ.சாஆ-1 ஆகும் போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**வழக்கறிஞர் ஆஜராகியும் குறுக்கு விசாரணை இல்லை என்று முடிக்கப்பட்டது.**